# அரைவேக்காடுகளின் கூடாரமா ஒன்றிய அமைச்சரவை?

ஒன்றியத்தில் இணை அமைச்சர்களில் ஒருவராக தமிழ்நாட்டைச் சேர்ந்த எல்.முருகன் என்பவர் இருப்பது தெரிந்ததே. தமிழ்நாட்டு மக்கள் பி.ஜே.பி.யை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்த பிறகு இவர் எப்படி தமிழ்நாட்டைச் சேர்ந்த பி.ஜே.பி.அமைச்சராக ஆக முடியும் – என்ற கேள்வி எழுவதும் நியாயமே!

இவர் ஒன்றிய அமைச்சராக இருந்து தமிழ்நாட்டில் நீலகிரி தொகுதியில் தேர்தலில் நின்று தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளர் ராஜாவிடம் தோற்றவர்! சரி, அதனை இத்தோடு விட்டு விடுவோம்; அவரது பழைய வரலாறு என்ன?

இந்த எல்.முருகன் ஆர்.எஸ்.எஸ். கட்சியின் பட்டியலினத்துப் பிரிவின் தேசியப் பொதுச் செயலாளராக இருந்தவர். இந்த ஆர்.எஸ்.எஸ். பேர்வழியைத்தான் 2011 ஆம் ஆண்டு ராசிபுரத்தில் தனது கட்சி வேட்பாளராக பா.ஜ.க. நிறுத்தியது. அந்தத் தேர்தலில் எல்.முருகன் மூன்றாவது இடத்தைப் பெற்றார். பரவாயில்லையே; மூன்றாவது இடமா?.. என எண்ணிவிடாதீர்கள். அவர் பெற்ற வாக்குகளைப் பார்த்தால் மூர்ச்சித்து விடுவீர்கள்! அவர் பெற்ற மொத்த வாக்குகளே 1730தான்! டெபாசிட் காலி! அந்த அளவுக்குத் தனது சொந்த மாவட்டத்திலேயே செல்வாக்கு(!) பெற்றிருந்த பேர்வழி! 2011ல் 1730 வாக்கு பெற்றிடும் அளவு செல்வாக்குப் பெற்றிருந்த இந்த ‘டெபாசிட்’ காலி பேர்வழியைத்தான் 2018ஆம் ஆண்டு தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணைத்தின் துணைத் தலைவராக பா.ஜ.க. அரசு ஆக்கியது!

**திடீர் சாம்பார், திடீர் இட்லி, திடீர் ரசம் என்பது போல, தமிழ்நாட்டின் திடீர் பா.ஜ.க. தலைவராக ஆனார் இந்த முருகன்!**

இந்த அதிமேதாவி அரசியல்வாதி தமிழ்நாட்டில் அரசியல் நடத்திய விதமே அலாதியானது! பொதுவாக எல்லாருமே அரசியல் கட்சிகளுக்கு எதிராக, அல்லது தாங்கள் சார்ந்த அரசியல் கட்சிக்கு ஆதரவாக ‘பாத யாத்ரை’, ‘வாகன யாத்ரை’ நடத்துவார்கள்! ஆனால் தமிழ்நாட்டின் பா.ஜ.க. தலைவராக இருந்த இந்த பிரகஸ்பதியோ, ‘யூ டியூப்’ சேனல் ஒன்றில் கந்த சஷ்டி கவசம் குறித்து கூறப்பட்ட கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டக் களத்தில் இறங்கிய அகில இந்திய கட்சியின் மாநிலத் தலைவர்!

அந்த ‘யூ டியூப்’ சேனலில் வந்த பிரச்சினைக்கு தகுந்த பதிலடி தர வக்கற்று, அதனை மாநிலம் தழுவிய அரசியல் பிரச்சினையாக்கிட எண்ணி,



‘வேல் யாத்திரை’ என்ற பெயரில் நவீன முருகனைப் போல வேலேந்தி வேன் யாத்திரை புறப்பட்டு ஒட்டுமொத்த முருக பக்தர்கள், இந்துக்களின் கோபத்தைச் சம்பாதித்தவர்!

அப்போது நடந்த சட்டமன்றத் தேர்தலில் வேல் தாங்கி தமிழ்நாட்டில் உலா வந்த இந்த முருகன், தாராபுரம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர்!

**இப்படி தோல்விமேல் தோல்வி அடைந்தாலும் அதற்காக வெட்கப்படாத ஒரு பிறவி நமது முருகன்!**

**மக்கள் ஆதரவின்றி இத்தனை தோல்விகளைத் தொடர்ந்து பெற்றவர் எப்படி ஒன்றியத்தில் இணை அமைச்சர் ஆக இரண்டாவது முறையும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் என்பது ‘மில்லியன் டாலர்’ கேள்வியே!**




இத்தனை சிறப்பு(!)மிகு, மக்கள் செல்வாக்கு(!)மிகு அந்த அமைச்சர், புதுடெல்லியில் ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத்தி, தான் தனக்குத் தரப்பட்ட அந்த அமைச்சர் பதவிக்கும் தகுதியற்றவர் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்! தான் ஒரு மாநில அமைச்சரல்ல; ஒன்றியத்தின் அமைச்சர் என்பதை உணராது தத்துபித்தென்று ஒரு பேட்டியைத் தந்துள்ளார்!

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்குதல் இரு மடங்காக அதிகரித்துள்ளது. தீண்டாமை இருக்கிறது. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க தி.மு.கழக அரசு தவறிவிட்டது என்றெல்லாம் அந்தப்பேட்டியில் கூறித் தனது அரைவேக்காட்டுத் தனத்தை அவரே அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்!

இவர் ஒன்றிய அரசின் இணை அமைச்சர். அதுமட்டுமல்ல; ஒரு காலகட்டத்தில ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் பட்டியலினப் பிரிவின் தேசியப் பொதுச் செயலாளராக இருந்தவர். பட்டியல் இன மக்களுக்கான தேசிய ஆணையத்தின் துணைத் தலைவராக இருந்தவர்!

தி.மு. கழக அரசின் மீது ஒரு குற்றம் சாட்டிட வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்தோடு, திடீர் செய்தியாளர் சந்திப்பை டெல்லியில் நடத்தியவர், பலவற்றைச் சிந்தித்திருக்க வேண்டும்; பல தகவல்களைச் சேகரித்திருக்க வேண்டும். அதையெல்லாம் விட்டுவிட்டு, தான் ஒன்றிய அமைச்சர் என்பதை மறந்த நிலையில், தற்குறித்தனமாக ஒரு பேட்டி அளித்துள்ளார் என்பதைக் காணும்போது, எத்தகைய அரைவேக்காடுகளின் கூடாரமாக நமது ஒன்றிய அமைச்சரவை அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது!

தி.மு.கழக ஆட்சியில் பட்டியலின மக்கள் மீதான வன்முறை இரட்டிப்பாகிவிட்டதாகக் கூறும் இவர், இப்படிப்பட்ட பழியை தமிழக அரசின் மீது சுமத்துவதற்கு முன், பிற மாநிலங்களில், குறிப்பாக பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் நிலை என்ன என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு பேட்டி அளிக்க வேண்டாமா? இப்படி ஒரு குற்றச்சாட்டைக் கூறினால், நம்மீது எப்படிப்பட்ட பதிலடிகள் விழும் என்பதை அறிந்து வைத்து பேட்டி தந்திருக்க வேண்டாமா?

2023 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது.

**“கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த நாட்டில் (இந்தியாவில்) தலித் (பட்டியலினத்தோர்) மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் எண்ணிக்கை எவ்வளவு?”**

– என்று எழுந்த கேள்விக்கு தேசிய குற்றப் பதிவு பணியகம் (NCRB) தந்த தகவல்கள் அடிப்படையில், 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரை நடந்த தலித், அதாவது பட்டியலின மக்கள் மீதான தாக்குதல்களை மாநில வாரியாகப் பட்டியலிட்டு நாடாளுமன்றத்திலேயே வைக்கப்பட்டது. அந்தப் பட்டியலை அமைச்சர் முருகன் பார்வைக்கு அப்படியே தந்துள்ளோம்:

அந்தப் பட்டியலை அருகில் காண்க!

**இந்த காலகட்டத்தில் பட்டியலின மக்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைகள் இந்தியாவில் 2021ல் மொத்தம் 50,744; பா.ஜ.க. ஆளும் உ.பி.யில் மட்டும் 13,146, மத்தியப் பிரதேசத்தில் 7,236, ஆனால் தமிழ்நாட்டில் 1,377 என்ற அளவில்தான் குற்றங்கள் நடைபெற்று வழக்குகள் பதிவாகியுள்ளன!**

**இந்த விபரங்கள் எல்லாம் அறியாமல், தான்தோன்றித் தனமாகப் பேட்டி தருபவர்களை எப்படி ஒன்றிய அமைச்சராக்கி பா.ஜ.க.வினர் தங்கள் தலையில் தாங்களே இடியை இறக்கிக் கொள்கின்றனரோ என்பது புரியாத புதிர்!**

**மக்களால் ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு கட்டத்திலும் நிராகரிக்கப்பட்ட மண்டுகங்களை அமைச்சராக்கினால், அவர்கள் எப்படிச் செயல்படுவார்கள் என்பதின் எடுத்துக்காட்டே, எல்.முருகன் போன்றோர்!**

Annexure mentioned In The Lok Sabha Unstarred Question No. 3443 for 21.03.2023 on Atrocities And Attacks On Dalits

State/UT-wise Cases Registered(CR), Cases Chargesheeted(CCS), and Persons Convicted(PCV) under Crime/Atrocities against Scheduled Castes (SCs) during year 2018 to 2021

| SL. No. | State/UT | 2018 | | | 2019 | | | 2020 | | | 2021 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | CR | CCS | PCV | CR | CCS | PCV | CR | CCS | PCV | CR | CCS | PCV |
| 1 | Andhra Pradesh | 1836 | 1430 | 105 | 2071 | 928 | 71 | 1950 | 1615 | 66 | 2014 | 1915 | 25 |
| 2 | Arunachal Pradesh | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 |
| 3 | Assam | 8 | 2 | 0 | 21 | 5 | 0 | 28 | 3 | 0 | 15 | 3 | 0 |
| 4 | Bihar | 7061 | 6469 | 81 | 6544 | 4784 | 74 | 7368 | 5453 | 18 | 5842 | 4588 | 80 |
| 5 | Chhattisgarh | 264 | 236 | 74 | 341 | 313 | 70 | 316 | 280 | 34 | 330 | 337 | 45 |
| 6 | Goa | 5 | 3 | 3 | 3 | 4 | 0 | 2 | 1 | 0 | 4 | 3 | 0 |
| 7 | Gujarat | 1426 | 1269 | 36 | 1416 | 1229 | 15 | 1326 | 1203 | 8 | 1201 | 1144 | 17 |
| 8 | Haryana | 961 | 564 | 58 | 1086 | 670 | 106 | 1210 | 632 | 12 | 1628 | 738 | 74 |
| 9 | Himachal Pradesh | 130 | 111 | 3 | 189 | 111 | 7 | 251 | 185 | 1 | 244 | 144 | 3 |
| 10 | Jharkhand | 537 | 250 | 33 | 651 | 209 | 20 | 666 | 292 | 15 | 546 | 460 | 30 |
| 11 | Karnataka | 1325 | 1098 | 48 | 1504 | 1131 | 50 | 1398 | 1208 | 29 | 1673 | 1556 | 18 |
| 12 | Kerala | 887 | 608 | 24 | 858 | 634 | 20 | 846 | 655 | 7 | 948 | 1111 | 49 |
| 13 | Madhya Pradesh | 4753 | 4738 | 1289 | 5300 | 5073 | 1775 | 6899 | 6718 | 791 | 7214 | 7236 | 1217 |
| 14 | Maharashtra | 1974 | 1545 | 131 | 2150 | 1800 | 111 | 2569 | 2133 | 87 | 2503 | 2357 | 68 |
| 15 | Manipur | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 16 | Meghalaya | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 17 | Mizoram | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 18 | Nagaland | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 19 | Odisha | 1778 | 1663 | 9 | 1886 | 2365 | 2 | 2046 | 2088 | 5 | 2327 | 2032 | 1 |
| 20 | Punjab | 168 | 84 | 9 | 166 | 76 | 11 | 165 | 97 | 9 | 200 | 96 | 11 |
| 21 | Rajasthan | 4607 | 2407 | 1035 | 6794 | 3194 | 1536 | 7017 | 3328 | 886 | 7524 | 3726 | 1034 |
| 22 | Sikkim | 5 | 4 | 0 | 4 | 2 | 0 | 0 | 0 | 0 | 2 | 1 | 0 |
| 23 | Tamil Nadu | 1413 | 1221 | 180 | 1144 | 967 | 123 | 1274 | 968 | 188 | 1377 | 1050 | 144 |
| 24 | Telangana | 1507 | 1046 | 46 | 1690 | 1119 | 56 | 1959 | 1534 | 25 | 1772 | 1550 | 50 |
| 25 | Tripura | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 0 | 0 | 3 | 0 | 0 |
| 26 | Uttar Pradesh | 11924 | 9906 | 4789 | 11829 | 9931 | 3099 | 12714 | 10489 | 3955 | 13146 | 11358 | 3612 |
| 27 | Uttarakhand | 58 | 65 | 0 | 84 | 68 | 35 | 87 | 64 | 0 | 123 | 87 | 0 |
| 28 | West Bengal | 119 | 80 | 0 | 145 | 89 | 0 | 109 | 128 | 0 | 108 | 122 | 0 |
| | TOTAL STATE(S) | 42747 | 34799 | 7953 | 45876 | 34703 | 7181 | 50202 | 39075 | 6136 | 50744 | 41614 | 6478 |
| 29 | A&N Islands | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 30 | Chandigarh | 1 | 1 | 0 | 1 | 0 | 2 | 3 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 31 | D&N Haveli and Daman & Diu+ | 1 | 0 | 0 | 2 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 |
| 32 | Delhi | 36 | 32 | 0 | 76 | 51 | 3 | 69 | 59 | 0 | 136 | 100 | 0 |
| 33 | Jammu & Kashmir* | 1 | 1 | 0 | 2 | 0 | 0 | 7 | 0 | 0 | 13 | 3 | 0 |
| 34 | Ladakh | - | - | - | - | - | - | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 35 | Lakshadweep | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 36 | Puducherry | 7 | 5 | 0 | 4 | 0 | 0 | 9 | 3 | 0 | 7 | 6 | 0 |
| | TOTAL UT(S) | 46 | 39 | 0 | 85 | 51 | 5 | 89 | 63 | 1 | 156 | 110 | 0 |
| | TOTAL (ALL INDIA) | 42793 | 34838 | 7953 | 45961 | 34754 | 7186 | 50291 | 39138 | 6137 | 50900 | 41724 | 6478 |

Source: Crime in India
Note: '+' Combined data of erstwhile D&N Haveli UT and Daman & Diu UT for 2018& 2019
*' Data of erstwhile Jammu & Kashmir State including Ladakh for 2018& 2019



நெல்லை திருமண்டல 244 வது ஆண்டு விழாவை முன்னிட்டு பாளை டக்கரம்மாள்புரம் சாராள் தக்கர் கன்வென்சன் மையத்தில் 10,000 மரக்கன்றுகள் நடும் நிகழ்வு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்று மரக்கன்றுகள் நடும் பணியைத் துவக்கி வைத்தார். உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான்,சி.ராபர்ட் புரூஸ் எம்.பி.,மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. மேயர் (பொறுப்பு) ராஜ்,தேவாலய பணியாளர்கள் உபதேசியார்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த்,நெல்லை திருமண்டல பேராயர் பர்னபாஸ், ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி உள்பட பலர் உள்ளனர்.



நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகக் கூட்டரங்கில் நேற்று முன்தினம் (09.07.2024) வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் 2024ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிக வரித் துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) பொ. இரத்தினசாமி, வணிகவரித் துறை கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.